Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3·00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ மீ ஆடி 14 ஆம் உ திங்கட்கிழமை (30 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 07 ஓசை 162

## கிழக்கில் பகலில் இராணுவம் இரவில் புலிகள்

(திருக்கோயில்)

இளம் புலிப் போராளிகளைச் சமாளிக்கமுடியாதுள்ளதென கிழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோயிலில் முகாம் அமைத்துள்ள அரசபடையினர் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணம் சென்ற செய்தியாளர்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## "உளவாளிகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவே பயணக் கட்டுப்பாடு"

விடுதலைப் புலிகள் -மக்கள் முன்னணி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் சம்பந்தமாகவும் இங்கிருந்து வெளியே போவோர் சம்பந்தமாகவும் இன்றைய நிலையில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் பின்வரும் விளக்க அறிக்கையை விடுத்துள்ளது.

இன்றைய போராட்ட சூழலில் பலர் பிறபகுதியில் இருந்து யாழ்-மாவட்டத்திற்கு வருகின்றார்கள். பலர் இங்கிருந்து பிற பகுதிகளுக்குச் செல்கின்றார்கள்.

அண்மைக் காலத்தில் சிங்கள அரசால் பிறபகுதியில் இருந்து (குறிப்பாக கொழும்பில்) உளவாளிகளாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப் (4 ஆம் பக்கம் பார்க்க)

◎ தமிழருடன் நீண்டகாலப் போருக்கு சிறிலங்கா கோரும்

# ஆயுத உதவிக்கு ஆஸி. மறுப்பு, சீனாவும் நழுவல் ஈரான் உதவி!

(நமது நிருபர்கள்)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் யுத்தத்தில் வெளிநாடுகளிடமிருந்து ஆயுத உதவி பெறுவதற்கு பிரேமதாசா தலைமையிலான சிறிலங்கா எடுத்துவரும் முயற்சி இதுவரை சரியான பயனைப் பெறமுடியவில்லை என்று இலங்கை அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆயுத உதவி எதுவும் வழங்கமுடியாதென ஆஸ்திரேலியா மறுத்துவிட்டது. பெல்ஜியம் ஆயுத பேரத்தைச் சாட்டாக வைத்து உதவியளிக்க, பின்வாங்கி விட்டது. அப்படியும் இப்படியுமாகச் சில உதவிகள் கொடுத்த சீனாவும் பின்வாங்கிவிட்டது. இந்நிலையில் ஈரான் மட்டுமே பாவிக்கப்பட்ட ஆயுதங்கள் சிலவற்றை வழங்கி வருகிறது.

சிறிலங்கா அரசு, தமிழ் மக்களுக்கு எதிராக நீண்டகால யுத்தமொன்றை தொடர்ந்து நடத்தும் நோக்குடன் ஈரான், சீனா உட்பட உலக நாடுகளிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கொள்வனவு செய்துள்ளதாக அரச வட்டாரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் முதல் கட்டமாக சக்தி வாய்ந்த போர் விமானங்கள் உட்பட ஆறு கவச வாகனங்கள் ஈரானிலிருந்து வெகு விரைவில் கொழும்புக்கு வரவுள்ளதாக தெரியவருகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாட்களில் 27 படையினர்பலி

(கொழும்பு)

நேற்று முன்தினம் முதல் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்று வரும் சண்டையில் இருபத்தேழு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், இதில் பரந்தன் சம்பவத்தில் ஏழு படையினர் கொல்லப்பட்டதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## ரஞ்சன் எச்சரித்துள்ளாராம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல்கள் நடத்தக் கூடாது என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா எச்சரித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

## இராணுவம் கணிசமான முன்னேற்றமாம்

(கொழும்பு)

வடபகுதி யுத்த முனையில் மிகத்தீர்க்கமான பத்து நாட்கள் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமைதான் குறிப்பிட்ட காலப்பகுதியில் முதல் அரைவாசி நாட்களிலும்படையினர் கணிசமான முன்னேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு அதிகாரியாக அமைச்சர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும், திருக்கோணமலை மாவட்டத்துக்கும் சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரியாக கப்பல்துறை, துறைமுகங்கள் அமைச்சின் செயலாளர் ரீ. கே. தஸநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

## பரந்தனைப் பலப்படுத்த இராணுவம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

பரந்தன் சந்தியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவம் அங்கு பெரிய முகாம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கிளிநொச்சி முகாமில் ஹெலிக்கொப்ரர் இறங்கவோ உணவு கொடுக்கவோ வசதியற்ற நிலையில் அவதிப்பட்டு வந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் அங்கிருந்து மெதுவாக வாபஸாகி பரந்தன் சென்றடைந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய நெருக்கடிக்கு அரசின் கொள்கையே காரணம்

-சிறிமாவோ

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் குறுகிய கால அணுகு முறையே இன்றைய நெருக்கடி நிலைமைக்கான காரணமென்று முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ள பேட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறி வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமின் முன்னால் காவலில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளைச் சேர்ந்த லெப்டினன் சிறி நேற்று விமானக்குண்டு வீச்சால் வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்.

## நால்வர் கைது

(கொழும்பு)

கடந்த வாரம் தெற்கில் ஜே. வி. பி. இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் காரணமாக இராணுவத்தில் ஒருவரும், வேறு மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை நினைவு முத்திரை

(புதுடில்லி)

இந்தியா இலங்கையில் அமைதிகாக்கும்படை ஆற்றிய சிறப்பான சேவையை நினைவு கூருமுகமாக மூன்றாவதாண்டு நினைவு தினத்தில் இன்று இரண்டு ரூபாய் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்படுகிறது.

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குள்

## ஹெலி இறங்கும் முயற்சி; புலிகளால் முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் சிறிலங்கா ஹெலிக்கொப்ரர்கள் நேற்று மத்தியானம் 12 மணியளவிலும், பிற்பகல் 4 மணியளவிலும் இறங்குவதற்கு இரண்டு தடவைகள் முயற்சித்தன. விடுதலைப் புலிகள் இந்தக் ஹெலிக்கொப்ரர்களை நோக்கித் தாக்குதல் நடத்தியதால் தமது முயற்சியைக் கைவிட்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்படை 50,000பேர் நியமனம்

வடக்கு கிழக்கு பகுதிகளின் சிங்கள எல்லைக் கிராமங் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிக்காகப் போராடும் எமக்கு இந்தியா தார்மீக உதவி புரியவேண்டும்

- கிட்டு

(லண்டன்)

அடக்கு முறைக்கு எதிராக நாம் ஆயுதமேந்தியவர்கள் என்பதை இந்தியா சரியான முறையில் புரிந்து கொள்வதுடன், பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்தது போன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரும், யாழ் மாவட்ட முன்னாள் தளபதியுமான திரு கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) லண்டனில் இந்திய பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி (4 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயிகள் நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

இப்பகுதி விவசாயிகள் தமது வெங்காயம், பீற்றூட், கீரை போன்ற உணவுப் பயிர்களை நீர்இறைக்கமண்ணெண்ணெயும், மின்சாரமும்கிடைக்காததால் விளைவுக்கு முன்னரே சந்தைப் படுத்துகின்றனர். (12)

## உணவு அட்டைகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தினால் அப்பகுதி வாழ் மக்களுக்கு உணவு அட்டைகள் வழங்கப் பட்டு வருகின்றன. (12)

## ஓடு பிரித்து திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி வீதியில் உள்ள எழிலூர் சன சமூக நிலையத்தில் மின்சாரம் இல்லாத இவ்வேளையில் ஓடு பிரித்து பலபெறுமதி மிக்க பொருட்கள் கொள்ளையிடப் பட்டன.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு நிலையத்திற்குள் இறங்கிச் சென்ற திருடர்கள் அங்கிருந்த ஒரு சுவர் மணிக்கூடு மின்சார உபகரணங்க்ள் உட்பட ரூபா 5500 பெறுமதி மிக்க பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர். (24)

## ப.நோ.கூ.சங்கங்களில் உணவு பங்கீடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள பல. நோ.கூ. சங்கங்களில்பங்கீட்டு அட்டை மூலம் உணவுப் பொருட்கள் தற்சமயம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அட்டை மூலம் ஒரு குடும்பத்துக்கு 100 ரூபாவுக்கு உட்பட்ட பொருட்களே வழங்கப்பட்டுவருவதுடன். சிலகூட்டுறவு சங்கங்களில் இன்னமும் பொருட்கள் வந்து சேராததினால் மக்கள் நாளாந்தம் மேற்படி சங்கங்களுக்கு சென்று ஏமாற்றத்துடன்செல்வதை அவதானிக்க முடிகிறது. (43)

## முதல் உதவிப் பயிற்சி

(உரும்பிராய்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினர் நடாத்திய முதல் உதவி பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றத் தவறியவர்கட்காகவும் ஏனைய மாணவர்களும் பங்குபற்ற ஆர்வமுள்ளமையாலும், அவர்களுக்கான பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் முதலாந் தேதி முதல் 5ஆம் தேதி வரை நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது. பயிற்சி பெற்றவர்களுக்கு முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். இவ்வகுப்புகள் அனைத்தும் காலை 9;00 மணிமுதல் பகல் 1-00 மணி வரை நடைபெறும்.(32)

காரைநகரில்

## ஷெல், குண்டு தாக்குதல்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து தம்பாட்டியை நோக்கி தொடர்ந்து ஏவுகணைக் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப் படுகிறது.

நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் இத்தாக்குதல் சம்பவம் ஆரம்பமானது.

மேலும் இரு பொம்மர்களும் இப்பகுதிகளில் குண்டுத் தாக்குதல் நடாத்தியது.

இத்தாக்குதலின்போது குடி இருந்த மக்கள் பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்பைத் தேடிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சேத விபரங்கள் தெரியவில்லை. (ம)

# கடந்த வன்முறைக்கு தலைமைவகித்தவரே இம் முறை இராணுவத்திற்குப் பொறுப்பதிகாரி

## தம்பலகாமத்தில் இருந்து தப்பிவந்தோர் தகவல்

(அலுவலக நிருபர்)

தம்பலகாமம் இராணுவ முகாமிலிருந்து முதல்நாள் தொடர்ச்சியாக 'ஷெல்'கள் ஏவிவிடப்பட்டன. 'பொம்மர்' 'அவ்ரோ' விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. 1600 குடும்பங்கள் அதாவது சுமார் 5000 பேர் வீடுவாசல்களை விட்டு உடுத்த உடையுடன் தம்பலகாமம் மகா வித்தியாலயத்துக்கு ஓடிச் சென்று தஞ்சம் புகுந்தோம். மறுநாள் பெருந்தொகையான இராணுவத்தினர் சுற்றி வளைத்து இளைஞர்களும் குடும்பஸ்தர்களுமாக 22 பேரை இழுத்துச் சென்றனர். இவர்களை துப்பாக்கியால் சுட்டு, ரயர்களைக் குவியலாகப் போட்டு தீ மூட்டினர். மேலும் 600 குடும்பங்களைத் தம்முடன் கூட்டிச் சென்றனர். இவர்களுள் அதிகமானோர் இளமையும் நடுத்தரமுமுடைய பெண்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. முன்னைய காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்குத் தலைமை தாங்கி, பல பெண்களை பாலியல் வன்முறைகளுக்காளாக்கிய சுரேஷ் ஹாசிம் என்பவரே இம்முறையும் இராணுவத்துக்குப் பொறுப்பதிகாரியாக வந்து இத்தனை பயங்கர சம்பவங்களையும் செய்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து அச்சம் கொண்ட நாங்கள், எங்கள் மனைவி, பிள்ளைகள், வயோதிபர்கள் எல்லோரையும் விட்டுவிட்டு, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பினோம்- பிழைத்தோம் என்று இங்கு வந்து சேர்ந்தோம்.

தம்பலகாமம் பகுதியிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்திருந்தவர்களைச் சந்தித்தபொழுது அதிர்ச்சி தரும் இத் தகவல்கள் தெரிய வந்தன.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை அகதி முகாமில் இப்பொழுது இவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களுள் ஒரு சிலரைத் தவிர அதிகமானோர் தங்கள் மனைவி, பிள்ளைகள், தாய் தந்தையர், சகோதரர்களை விட்டுப் பிரிந்து வந்தவர்கள்.

பன்குளம், கப்பல்துறை 6ம் கட்டை, கந்தளாய், விளாங்குளம், சீனக்குடா, பாலம் போட்டாறு, முள்ளிப் பொத்தானை, கிராமங்களைச் சேர்ந்த 5000 பேரும் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த 1600 குடும்பங்களுமே இந்த நிர்க்கதிக்குள்ளானவர்கள்.

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களுள் 15பேரின் பெயர் விபரங்கள் வருமாறு: வே.விசுவநாதன் (38வயது) இருசகோதரர்களான நாகராசா (26 வயது), கோணலிங்கம் (20 வயது), இ. சுந்தரலிங்கம் (17 வயது) புதுக்குடியிருப்பு, வ. சுப்பிரமணியம் (30வயது) கனகசபை (திப்பிலி) கோணேசர் கோயிலடி, சு. கோணேஸ் (27வயது), மா. திசைநாதன் (21 வயது) கொலனி, கிருஷ்ணபிள்ளை (40வயது) முள்ளியடி, கேதாரணியன்(18வயது) உதயராஜா (15 வயது), பா. விக்கினேஸ்வரன் (16 வயது), பா. பாலசுப்பிரமணியன் (27 வயது) பாலம் போட்டாறு, நெத்தலி மணியம் (30வயது) திருமலை மடத்தடி சு. கங்காதரன் (20வயது) படிமேடு.

கொலையுண்ட மற்றைய 7 பேரும் வேறு கிராமங்களிலிருந்து அகதிகளாக தம்பலகாமம் வந்திருந்தமையினால் அவர்களின் பெயர் விபரங்கள் தெரியவில்லை என்று அந்த அகதிகள் தெரிவித்தனர்.

2.7.90இல் இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்பயங்கரச்சம்பவம் நடைபெற்றதைத்தொடர்ந்து இரவோடிரவாகக் காடுகளுக்குள் புகுந்து கொண்டோம். சேறும் சகதியும் நிரம்பிவழியும் கடலும் ஆறுகளுக் கூடாகப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்ததால் எங்கள் மனைவி குழந்தைகளை விட்டு வந்தோம் என்று கண்ணீர் மல்கியபடி சொன்னார்கள்.

### இருவர் சேற்றில் புதைந்து மரணம்

எங்களுடன் வந்த இருவர் பாலம் போட்டாற்றைக் கடக்கும் பொழுது சேற்றுக்குள் புதைந்து மரணமானார்கள். சிவசேகரம் (24வயது) திருச்செல்வம் (24வயது) ஆகியவர்களேமரணமானவர்கள். இந்த நிலையில் எப்படி எங்கள் குடும்பங்களைக் கூட்டிவரலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### கேடயமாக மக்கள்

இராணுவத்தினரும், ஊர் காவல்படையினரும் 'ஜிகாத்' இயக்கத்தினரும் சேர்ந்து எமது மக்களை முன்னும் பின்னும் அருகாமையிலும் கேடயமாகவைத்துக்கொண்டு தான் தேடுதல் நடத்துகிறார்கள்.

### 3 மாணவிகள் மானபங்கம்

ஜூன் 22ஆம் திகதி சூரங்கல் பகுதி சுற்றிவளைக்கப் பட்டது. 12பேரை கைது செய்தார்கள் 9பேரை சுட்டுக் கொன்றார்கள். 3பேர் படுகாயம். மேலும் 21வயதுடைய மாணவிகளான மூவரைக் கைதுசெய்து பாலியல் வன்முறைக்குள்ளாக்கினார்கள். பின்னர் முதலிருவரையும் சுட்டுக்கொன்றார்கள். மூன்றாமவர் தப்பித்துச் சென்று விட்டார் இவர் இப்பொழுது விடுதலைப்புலிகளின் பராமரிப்பில் இருப்பதாக அறிகின்றோம். என்றும் அவர்கள் தெரிவித்தனர். (மா)

## உறுப்பினர்கள் தெரிவு

(வடமராட்சி)

கட்டைவேலி நல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய இயக்குநர் சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது: பின்வருவோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திரு. சி. தங்கத்துரை (தலைவர்), திரு. சி. சீனித்தம்பி (உபதலைவர்), திரு. மா. தவயோகம், திரு. ம. தவயோகம், திரு. தா. ஜெகராசசிங்கம், திரு. க. சிவபாலசிங்கம், திரு. க. இராசரத்தினம். (18)

## வெற்றிக்காக பிரார்த்தனை

(பண்டத்தரிப்பு)

புனிதப் போரில் இறங்கியுள்ள விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் இனத்திற்கும் வெற்றியும் சித்தியும் வேண்டி வட்டக்கச்சி, இராமநாதபுரம் சைவாலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகளும் விசேட ஆராதனைகளும் நடத்தப்படுகின்றன.

மாவடி அம்மன் ஆலயம், ஆறுமுகம் வீதி கந்தசுவாமி கோவில், வட்டக்கச்சி பாலமாவடி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் ஜூலைமுதலாந் திகதியில் இருந்து இறை அருள் வேண்டிப் பிரார்த்தனைகள் தினமும் வழிபடுவோர் சபைகளினால் நடத்தப்படுகின்றன. (12)

## பயிர்கள் நாசம்

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா இராணுவக் கெடுபிடிகளால் பலாலியில் சுமார் ஆயிரம் குடும்பங்களது விவசாய நிலத்தில் உள்ள பயிர்களான வெங்காயம், மிளகாய், மரவள்ளி, முந்திரி போன்றன தண்ணீர் இறைப்பின்றி எரிந்து நாசமாகி விட்டன. (24)

## உணவு உற்பத்தி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள உணவு உற்பத்திக்கான நீர்ப்பாய்ச்சல் பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெறும். இப்பகுதியிலுள்ள அனைத்து தோட்டச் சொந்தக்காரர்களையும் தவறாது இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளனர்.

## பொதுக்கூட்டம்

(கோப்பாய்)

நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு ஆகிய இடங்களில் உள்ள மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு எக்ஸ்பிறஸ் கல்விக் கூடத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு சகல மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

## உணவுப் பங்கீட்டு விநியோகம்

(அச்சுவேலி)

யுத்தநிலைமையில் உணவுப் பொருட்களை பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதற்கு வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் விசேட உணவுப் பங்கீட்டு அட்டையை பாவனையாளர்களுக்கு விநியோகித்து வருகின்றது.

மாதாந்த அடிப்படையில் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு வசதியாக பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் மூலம் குடும்ப அடிப்படையில் விசேட உணவுப் பங்கீட்டு அட்டை பாவனையாளர்களுக்கு குடும்ப அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

## சிற்றூரவைக் கூட்டம்

பலாலி, மயிட்டி, வீமன்காமம் காங்கேசன்துறை சிற்றூரவை உறுப்பினர்களின் கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை (1.8.90) காலை 9.00 மணிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற இருப்பதால் சிற்றூரவை உறுப்பினர்களும் இப்பிரதேச மக்களும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## சட்டவிரோதமாக வந்தனர்

(கொழும்பு)

பதின்மூன்று இந்திய பிரஜைகளும் ஒரு ஜேர்மன் பிரஜையும் சட்டவிரோதமாக நாட்டிற்குள் வந்துள்ளதாக குடியகல்வு குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் கூறினர்.

## மஹோற்சவம்

(கொழும்புத்துறை)

அளவெட்டி பெருமாக்கடவை அருள் மிகு வினாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினசரி விஷேட அபிஷேக பூசை வழிபாடும், பின் வினாயகப் பெருமான் வீதி வலம் வருதலும் நடைபெறும். (24)

## உதவி நிவாரணம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுனர் ஆசிரியர் சங்கம் தமது பகுதியில் இருக்கும் (அளவெட்டியில் உள்ள) 4முகாங்களில் உள்ள 173 குடும்பங்களுக்கு உணவுப் பொருள் (அரிசி, தேங்காய் மற்றும் பாத்திரம், படுக்கை விரிப்பு போன்றபொருட்களை வழங்கியுள்ளார்கள்.


பட்டப்படிப்புகள் கல்லூரி

**மாணவர்களின் கவனத்திற்கு**

பேராதனைப் பல்கலைக்கழகத்தால் 1989 / 90 கல்வியாண்டு வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால் பின்வரும் கழகவாண்டு மாணவர்கள் 5-8-1990 ஞாயிறு காலை 9 மணிக்கு இல. 78 பலாலி வீதி திருநெல்வேலியில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதவிப்பதிவாளர்
(B. 1296) பட்டப்படிப்புகள் கல்லூரி

### சிந்தனைக்கு

பிறரை ஏமாற்ற துணிந்து முனைகிறோம்,
நமக்கே சிலந்தி வலையைப் பின்னிவிடுகிறோம்.

— ஸர்வால்ட்டர் ஸ்காட்

**ஈழநாதம்**

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 30-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ. எண் 05

# அங்குலிமாலாவும் ஆற்றுநீர்ப் பங்கீடும்!

அங்குலிமாலா என்றொருவன் இருந்தான். அவன் நரபலி எடுப்பவன். தான் கொலை செய்பவர்களின் மண்டை ஓடுகளை மாலையாகக் கோர்த்துக் கழுத்தில் அணிந்து கொள்வான். இவனைக் கண்டால் மக்கள் நெஞ்சம் கலங்கும்.

இத்தகைய கொடியவனை புத்தர் பெருமான் சந்தித்துத் தமது கருணையால் அவன் மனதை மாற்றி நல்லவனாக்கினாராம்.

இந்த ''புத்தர் புராணக் கதை''யை சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் எடுத்துக் கூறித் தாமும் புத்தர் போல ''பயங்கரவாதிகளை'' நல்லவர்களாக்க முயன்று வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் போர் விமானங்களிலிருந்து குண்டு வீசிப் பொதுமக்கள் என்ற ''பயங்கரவாதிகளை'' ''நல்லவர்களாக மாற்றும்'' வசதியும் வாய்ப்பும் நவீன புத்தரான பிரேமதாசாவுக்கு இருப்பதுபோல் அன்று கௌதம புத்தருக்கு இருக்கவில்லை.

பாவம் கௌதம புத்தர்!

நல்ல நீரில் மீன் வளர்த்து உண்பது கொடிய பாவம் என்று புத்தர் போதித்திருப்பதை இத்தனை வருடங்களுக்குப் பின்னர் இப்பொழுது வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் நடைபெறும் சமயத்தில்தான் உலக பௌத்தர்களும் உள்நாட்டு பௌத்தர்களும் உணர்ந்து எடுத்துக்காட்ட நவீன புத்தர் பிரேமதாசாவும் நன்னீர் மீன் வளர்ப்புக்குத் தடை விதித்திருக்கிறார்.

கடல்மீன், குளத்துமீன் ஆற்றுநீர்பற்றி இதுவரை கௌதம புத்தர் ஏதும் சொல்லியிருந்தது கண்டு பிடிக்கப்படவில்லைப் போலும்!

புத்தர் பிரானின் போதனைகளை (தேரவாதம் மகாயனவாதம் என்று பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று வாதம் புரிந்தாலும் ஜப்பானிய உதவி நின்றுபோய் விடுமோ என்ற அச்சத்தில் இந்த வாதங்களை மூடி மறைத்துச் சமாளித்தாலும்) ''தப்பாமல் பின்பற்றும்'' சிறிலங்காவும் அதன் ஜனாதிபதியும் நாட்டின் இன்றைய பெரும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியை மறந்துவிட்டார்களா?

1985 ஆம் ஆண்டில் சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி அன்று பிரதமர் ரணசிங்க பிரேமதாசாவாக இருந்தார். அந்த வருடம் வெசாக் பண்டிகை கொண்டாட்டத்தையொட்டி பிரேமதாசா ''வெசாக் வாழ்த்து'' மடல்கள் அச்சுப் பதித்துப் பலருக்கும் அனுப்பியிருந்தார்.

அந்த வாழ்த்து மடலின் முகப்பு அட்டையின் நடுவே புத்தர் பெருமான் நிற்கிறார். அவருக்கு ஒரு புறத்தில் சாக்கிய மன்னன் தமது படைகளுடன் அணி வகுத்து நிற்க மறுபுறத்தில் மௌலிய மன்னன் தமது படைகளுடன் போருக்குத் தயாராக நிற்கும் படம் அச்சிடப்பட்டிருந்தது.


சாக்கியர்களுக்கும் மௌலியர்களுக்கும் இடையே ஆற்று நீர்ப்பங்கீடு சம்பந்தமாகப் போர் தொடங்குவதற்கு ஆயத்தமாகும் நேரம் புத்தர் பெருமான் அங்குவருகிறார்.

இருதரப்பும் போர் புரிவதால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களையும் இழப்புக்களையும் எடுத்துக் கூறி ஆற்றில் ஒருபக்கத்தை சாக்கியர்கள் உபயோகிக்கவும் மறுபக்கத்தை மௌலியர்கள் உபயோகிக்கவும் யோசனை தெரிவிக்கிறார்.

இந்த யோசனையை சாக்கியரும் மௌலியரும் ஏற்றுக் கொள்கின்றனர். போர்புரியாமலே பிரச்சினை தீர்க்கப்படுகிறது. வாழ்த்து மடலின் உள்ளே இந்தக் கதை சுருக்கமாக அச்சிடப் பட்டிருந்தது.

புத்தரின் இந்த போதனையையும் யோசனையையும் முதலில் தமது புத்தபிக்குகளுக்கு சிறிலங்காவின் நவீன புத்தர் பிரேமதாசா எடுத்துக் கூறி இலங்கையின் இனப் பிரச்சினையையும் சுலபமாகத்தீர்த்து வைக்கலாமே!

தேவையற்ற ஒரு போரில் வீணாக மக்கள் அழிய வேண்டுமா? தமிழ் மக்களுக்கு அவர்களுடைய பங்கைக் கொடுத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். மலேசியாவும் சிங்கப்பூரும் போல சிறிலங்காவும் தமிழீழமும் தொடர்ந்தும் சகோதர நாடுகளாக வாழலாமே! புத்தர் கூறிய போதனையும் இதுதானே!




உங்கள் சிந்தனைக்கு...

# நன்னீர் மீனும் பௌத்த தர்மமும்

'நன்னீர் மீன்களைக் கொல்வது மகாபாவம்' பௌத்த நெறிக்குப் பொருந்தாது. இலங்கை வாழ் பௌத்தர்களின் ஏகோபித்த குரல் கேட்டு, ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுத்துள்ளார். பௌத்த தர்மத்தை முழுதாக உணர்ந்து கொண்ட இரண்டாவது அசோக சக்கரவர்த்தி ரணசிங்க பிரேமதாசா என ஏற்றுக் கொண்டிருந்த பௌத்த மக்களுக்கு ஓர் சந்தேகம். இந்த உண்மையை இவ்வளவு காலம் அறியாதிருந்தாரா. அகில உலகப் பௌத்த சங்கங்கள் உட்பட அனைத்து பௌத்த சங்கங்களும் இக் கொலை வெறிக்கு எதிரான அகிம்சைப் போராட்டத்தில் பெற்ற மகத்தான வெற்றிகண்டு ஆன்மீக உலகமே பெருமிதமடைகின்றது. இக்காலத்தில் கூட இச் செய்தியை வாசித்து அறியும் உலகில் ஏதோ ஒரு மூலையில் வாழும் பௌத்தன், இந்த பௌத்த நிறுவனங்களில் முற்போக்கான ஆன்மீக நடவடிக்கையைக் கண்டு மனம் மகிழ்ந்திருப்பான். எந்த உயிரும் துன்புறுத்தப்படக் கூடாது என்பதில் பௌத்த தர்மம் எவ்வளவு விழிப்பாக இருக்கின்றது.

பாவம் உப்பு நீர் மீன்கள் உவர் நீர் மீன்களே உங்கள் விதியை நினைந்து கண்ணீர் வடித்து விடாதீர்கள். கடல் நீர் பெருகி விட்டால், நன்னீர் மீன்கள் அழிந்து விடும். தமிழ் ஈழக் கரையோர மக்களே எனியாவது உங்களுக்கு உண்மை புரியவேண்டும். தினமும் பல ஆயிரக் கணக்கான மீன்களைக் கொன்று குவிப்பதால்தான், எமது பௌத்த அரசு, பீரங்கிகளாலும், செல்களாலும், துப்பாக்கிகளாலும். உங்களையும், உங்கள் உடைமைகளையும் அழிக்கின்றார்கள். நீங்கள் பிடிப்பது உவர்மீன்கள் தானே எனக் கேட்காதீர்கள். தமிழன் பிடிப்பதால் அவையும் நன்னீர் மீன்களே.

நன்னீர் மீன்கள் துன்பப்படுவதைக் கண்டு ஒன்றுபட்ட பௌத்தர்களுக்கு, இந்நாட்டில் தொடர்ந்தும் நடைபெறும் மனித உயிர்க் கொலைகள் கண்ணுக்குத் தெரியவில்லையா? காதுக்கு எட்டவில்லையா? சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் பல சுட்டிக் காட்டிய பின்பும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் குரல் எழுப்பியும் கண் விழிக்கவில்லையே. தனது முக்கிய சீடர்களின் இந்த மூன்று வினாக்களுக்கு புத்தர் விடையளிக்காது மௌனம் சாதிததாராம், என பௌத்த வரலாறு கூறுகின்றதே. அப்படித்தான் இம் மௌனமுமா?

தனது இனத்தையே உயிருடன் எரிததவர்கள் எரிக்கக் கட்டளை இட்டவர்கள், அத்தகைய படையைப் பச்சைப்போர்வை சுற்றி அருகில் வைத்திருப்பவர்கள் தமிழர்களை விடவா போகிறார்கள் என்று கேட்பவர்களே! நீங்கள்பௌத்ததர்மத்தையே அறியாதவர்கள் மீன்கள்படுந் துன்பத்தையே பொறுக்காதவர்கள் உண்மைப் பௌத்தர்கள்.

★ பாலன் ★

பௌத்தர்கள் வேறு, உண்மை பௌத்தர்கள் வேறா? அவ்வாறாயின் எமது ஜனாதிபதி அமைச்சர்கள் முன்பிருந்தவர்கள் அவர்களுக்கு முன்பிருந்தவர்கள், எல்லோரும்பௌத்தர்கள் தான். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தான் உவர்நீர் மீன், நன்னீர் மீன். சாதியை ஏற்காத பௌத்தம், நன்னீர் மீனுக்கும், உவர்நீர் மீனுக்குமிடையில் வேறுபாட்டை எப்படி ஏற்றது என்று கேட்காதீர்கள். ''கொன்றுதின்றது விலைக்குவாங்கித்தின்பார்க்கு குற்றமில்லை'' என்று அகிம்சைக்கு விளக்கந்தந்தது புலால் உணவுக்குத் தடை இல்லை என்பர் புத்தபிரானே அதற்குச் சாட்சி எனப்பலர் 'கொல்லாமை' என்ற ஒழுக்கத்திற்கு உரை எழுதியுள்ளனர் பாடநூல்களிலும் காணப்படுகிறதே என்றும் கேட்காதீர்கள்.

''துராசையை நீக்கி தூய அன்பைப் பேணி யாவரும் நலமே நாடும் தொண்டு நெறியில் துறவி படரவேண்டும்'' என்றார் புத்தர். ஒரு பௌத்த துறவியாவது இதனை - கொன்றுகுவிக்கும் ஈனச் செயலைக் கண்டிக்க வில்லையே என்று ஏங்கும் நெஞ்சங்களே, நாம் எல்லோருந்தானே மீனைக் கொல்கின்றோம். ''புறாவுக்காகத் தனையீந்த சிபியைப் புத்தரின் மறுபிறப்பாகக் கொண்டாடிய'' மரபு தென்னாட்டிலிருந்ததாமே. இந்த அறிஞர் பெருமக்கள் சும்மா இருக்கமாட்டார்கள். ஆசை காட்டுவதே இவர்கள் வழக்கம் இதை நம்பி அண்மையில் திருமலையில்பௌத்த குருவிடம் தஞ்சமடைந்த தமிழ் குடும்பம் ஒன்றை இராணுவத்திடம் பக்குவமாய் ஒப்படைத்தாராம்.

பஞ்சசீலத்தில் முதலாவது ஒழுக்கம் கொல்லாமை இரண்டாவது கள்ளாமை .எப்போதும் இவை இரண்டுந்தானே மேலோங்கி நிற்குது. அதனால் தான் புத்தர் முதலில் இதைக் கூறி நெறிப்படுத்த முயன்றார் போலும். எந்தத் தீய பழக்கம் முனைப்புப் பெற்று நின்கின்றதோ அதைச்சுட்டிக்காட்டத்தானே நாம் புத்தி கூறுகின்றோம்.

ஆனால் இது உண்மை 'பிரதீத்த சமுப்பாத' பௌத்தத்தின் முக்கிய தத்துவம். காரண காரிய தொடர்ச்சி என்பதே இதன் விளக்கம். அதாவது ஒருவன் ஆற்றிய வினைக்கு ஏற்ப பிறப்பு அவரைத் தொடரும். மறுபிறப்பை உறுதியாக ஏற்றுக் கொள்ளும் பௌத்தம் அதற்குத்தரும் விஞ்ஞான ரீதியான விளக்கம் இதுவே. மார்க்முல்லர், ராதாகிருஷ்ணன் போன்ற அறிஞர்களே இதைச் சுட்டிக் காட்டி உள்ளனர். மீனைக் கொன்ற பாவ ஆத்மா மீண்டும் பிறப்பான். மன்னிக்கவும். நன்னீர் மீனைக்கொண்ட பாவ ஆத்மா மீண்டும் பிறந்து துன்பத்தில் ஆழ்வான்.

# பணயக் கைதிகளை விடுவிக்க இறுதி நேரப் பேச்சுக்கள்

(போட் ஒவ் ஸ்பெயின்)

ட்ரினிடாட் ருபாகோ தீவின் ஆட்சி செய்யும் பிரதமரையும் அமைச்சர்களையும் பணயக் கைதிகளாக பிடித்துள்ள முஸ்லிம் தீவிரவாதிகளுடன் இறுதிக்கட்டப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை நிறைவேறாவிடில் பிரதமரையும், அமைச்சர்களையும் தாம் கொல்லப்போவதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ட்ரினிடாட் ருபாகோ கரிபியன் தீவுகளில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுக்கள் சரிவந்தால் பிரதமரும் அமைச்சர்களும் விடுவிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மூன்று வேளை சாப்பாடுபோல் யாழ். நகரில்
# மூன்று வேளை குண்டு வீச்சும் ரோந்தும்!

(யாழ்ப்பாணம்)

ஏறத்தாழ ஸ்ரீலங்கா அரசு வைத்திருக்கும் அனைத்துக் குண்டுவீச்சு விமானங்களும் நேற்று யாழ். நகரில் பலத்த தாக்குதலை மேற்கொண்டன. காலையிலும், மதியத்திலும், மாலையிலுமாக மூன்று முறை பலத்த தாக்குதல்களை மேற்கொண்டன.

**காலையில்**

காலை பதினொரு மணியளவில் ஐந்து குண்டுவீச்சு விமானங்கள் அகோரத்தாக்குதலை நடாத்தின. இரண்டு குண்டு வீச்சு விமானங்களும்,!இரண்டு அவ்ரோ விமானங்களும், பிரமாண்டமான வெள்ளை நிற விமானம் ஒன்றும் இத்தாக்குதலை மேற்கொண்டன.

இந்தத்தாக்குதல்கள் அனைத்தும் கோட்டை இராணுவ முகாம் சுற்றாடலை அண்டிய பகுதிகளிலேயே கூடுதலாக மேற்கொள்ளப்பட்டது.

**மதியம்**

மதியம் சுமார் ஒரு மணி அளவில் அவ்ரோ விமானங்கள் மூன்று கடும் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதல்களும் குறிப்பாக யாழ்ப்பாண நகரையும், கோட்டை முகாம் சுற்றாடலையுமே குறியாகக் கொண்டு தாக்கப்பட்டது.

**மாலையில்**

நேற்றுமாலை நாலரைமணியளவில் ஐந்து குண்டுவீச்சு விமானங்கள் வானத்தில் அலைந்தன. ஆனால் இவை எந்தவிததாக்குதலையும் மேற்கொள்ளாது திரும்பிவிட்டன. இந்தவிமானங்கள் வானத்தில் பிரவேசித்ததும் மக்கள் பீதியுடன் பதுங்கு குழிக்குள் ஓடினர்.

**வெள்ளைநிற விமானம்**

நேற்றுக் காலை யாழ். நகரில் நடந்த குண்டுவீச்சுத் தாக்குதலில் பிரமாண்டமான ஓர் வெள்ளைநிற விமானமும் பங்குபற்றியது. இவ்விமானம் நகரின் பலபகுதிகளிலும் பெரும் இரைச்சலுடன் குண்டுகளை வீசியது. இவ்விமானம் மூலம் போடப்பட்ட குண்டுகள் பெரும் வெடியோசையைக் கொண்டதாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளைநேற்றுமுன்தினம் நள்ளிரவில் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி பலமான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் தினசரி நல்ளிரவில் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது இதேபோன்று வட கரையோரப் பகுதியில் பீரங்கிப் படகுகள் சில தொடர்ந்தும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(லோ)

---

**ஊர்காவற்படை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை பாதுகாப்பதற்கு ஐம்பதாயிரம் ஊர்காவல் படையினர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான தேர்வுகளும் விரைவில் நடைபெறும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

**நால்வர்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொரவக்காவில் கடந்த புதன்கிழமை பன்னிரண்டு விழிப்புக் குழுவினர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அது தொடர்பாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா தெரிவித்துள்ளார்.

---

**ஹெலி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவை திரும்பிச் சென்றன.

திரும்பிச் செல்லும்போது கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(லோ)

---

**நீதிக்காகப்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

தற்போதைய இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு தமிழீழ போராட்டத்திற்கு தனது தார்மீக ஆதரவை வழங்கத் தவறும் பட்சத்தில் அந்நியத் தலையீடு இப்பிரச்சினையில் உருவாகும் அபாயம் ஏற்படுமென்றும் திரு. கிட்டு அந்தப் பேட்டியில் எச்சரிக்கை செய்துள்ளார்.

மேலும் தமிழீழப்போராட்டத்திற்கான இந்தியாவின் தார்மீக ஆதரவு குறித்துத் தமிழக முதல்வர் கலைஞர் மு கருணாநிதியுடன் அண்மையில் தாம் தொடர்பு கொண்டு பேசியததாகவும் தெரிவித்துள்ளார்.

நீதிக்காகப்போராடுபவர்கள் நாங்கள். எனவே தான் நான்காவது வல்லரசான இந்திய அமைதிப்படையுடன் போர் தொடுத்தோம். இருந்தும் அரசியல் ரீதியில் இந்தியாவுடனான உறவையே விரும்புகின்றோம் என்று அங்கு கூறிய திரு கிட்டு இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு தமிழக அரசு செய்துவரும் உதவிகள் குறித்து தமது மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

---

**இன்றைய**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியொன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் வழிவகுக்குமென்று எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயக்கா கூறியிருக்கிறார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாதென்று தாம் ஒருபோதும் சொல்லவில்லை. என்றும் அவர் சொன்னார்

---

## மரண அறிவித்தல்

### திரு. கந்தர் சிவசம்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1933-01-18 | 1990-07-28 |

ஏழாலை மத்தியைச் சேர்ந்த
திரு. கந்தர் சிவசம்பு காலமானார்.

இவர் தங்கபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவமலர் சூரியகுமாரன் (லிபியா) புனிதவதி, சறோசாதேவி சிவகுமாரன், சிவஞானமலர், புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் (சவூதி) இரத்தினம் விஜயநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-07-1990 அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

B/1298

---

## அரச அறிவிப்பு

(கொழும்பு)

மன்னாருக்கு நானூறு தொன் உணவுப் பொருள்கள் கப்பல்மூலம் அனுப்பிவைக்கப் பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

---

**உளவாளிகள்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பலரை கைது செய் அளித்துள்ளேம்.

அதேபோல் இங்கிருந்து சிங்களப் படைக்குத் தகவல்தர வெளியே செல்ல முற்பட்ட சிலரைக் கைது செய்துள்ளோம்.

இவர்களிடம் இருந்து பல முக்கிய தகவல்களைக் கொண்ட வரைபடங்கள், ஆவணங்கள், புகைப்படங்கள் என்பன எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்படியாக தகவல் பெறும் உளவாளிகளைக் கண்டு பிடிக்க: கட்டுப்படுத்த நாம் யாழ்-மாவட்டத்தினுள் வருவோரினதும் யாழ். மாவட்டத்தைவிட்டு வெளியேறுவோரினதும் தகவல்களைப் பெற உள்ளோம்.

இதனால் பொதுமக்களுக்கு சில சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும் போராட்ட காலத்தில் இப்படியான உளவாளிகளை ஊடுருவ விடாமல் தடுப்பது பொதுமக்களின்கடமையாகும்

எனவே ஏற்படும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்

01. யாழ். குடாநாட்டை விட்டுவெளியேறும் சகல வாகனங்களும் யாழ் முத்திரைச் சந்தியில் இருந்தே புறப்படும்.

02. யாழ். குடாநாட்டுக்குள் (வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி) வரும் சகல வாகனங்களும் யாழ். முத்திரைச் சந்திக்கே கொண்டுவரப்பட்டு பயணம்செய்யும் பயணிகள் குறித்த விபரங்கள் எம்மால் பெறப்பட்ட பின்னர் பயணிகளுக்குரிய பயண பாதுகாப்பு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

03. வாகனங்களோ,பயணிகளோ புறப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

04. அனுமதிக்கப்பட்ட வாகனங்கள், அனுமதிக்கப்பட்ட பயணிகள் மாத்திரமே குடாநாட்டை விட்டுச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

05. அனுமதிக்கப்படாத பயணிகளை ஏற்றும் வாகனங்கள் பயணம் தொடர அனுமதிக்கப்படமாட்டாது.

---

**பரந்தனைப்**

இப்பொழுது பரந்தன் முகாமுக்கும் ஆனையிறவுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்கிறது. ஹெலிக்கொப்ரர்கள் இங்கு அடிக்கடி இறங்கிச் செல்கின்றன.

---

## பவுண் தருவோரின் கவனத்திற்கு

தமிழீழ மீட்பு நிதிக்காக நாம் இரண்டு பவுண் தங்கத்தை வாங்கி வருகின்றோம்.

பல தமிழ் மக்கள் எமக்கு இரண்டு பவுண் தங்கத்தைத் தருவதாக நகை வியாபாரிகளிடம் சென்று இரண்டு பவுண் பெறுமதியுள்ள தங்கத்தை அல்லது நகைகளை வாங்கி எம்மிடம் அளித்து வருகின்றனர்.

தங்கத்தை அல்லது நகைகளை இவர்களுக்கு விற்கும் பலர் மோசடியில் ஈடுபட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படியான மோசடியில் ஈடுபடுபவர்கள் குறித்து நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

புதிதாகப்பவுண் அல்லது நகைகளைச் செய்யும் தமிழ் மக்கள் எம்மிடம் வரும்போது தயவுசெய்து அது எங்கு வாங்கப்பட்டது, எங்கு செய்யப்பட்டது என்ற பற்றுச் சீட்டையும் கொண்டு வரவும்.

இதன்மூலம் மோசடி செய்கின்ற வியாபாரிகள் மேல் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

இரண்டு பவுண் தங்கம் அல்லது அதற்கு மேல் தர இணங்கியோர் பவுண் தம்மிடம் இல்லாதவிடத்துப் பவுணுக்கு ரூபா 5 000/- வீதம் காசாகவும் தமிழீழ மீட்பு நிதிக்குத் தரமுடியும்.

தலைமைச் செயற்குழு
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

---

**ஆயுத**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருபத்தைந்து கவச வாகனங்களை பெல்ஜியத்திடமிருந்து வாங்குவதற்கு சிறிலங்கா அரசு அந்நாட்டு அரசுடன் பேச்சு நடத்தியபோதும், விலை உயர்வின் காரணமாக அப்பேரம் கைவிடப்பட்டது. இதன் பின்னர் ஈரானிடமிருந்து பயன்படுத்தப்பட்ட ஆறு கவசவாகனங்கள் குறைந்த விலையில் வாங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது இந்த ஆறு கவச வாகனங்களும் ஈரான் படையினரால் ஈரான்-ஈராக் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டவை என்றும் இதனாலேயே சிறிலங்காவுக்கு மலிவு விலையில் விற்கப்பட்டதாகவும் தெஹிரான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானிடமிருந்து மேலும் இரண்டு வகையான சரக்குப் போக்குவரத்து விமானங்களையும் வாங்க சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது. சிறிலங்கா விமானப்படையிடம் ஏற்கனவே இரண்டு சரக்குப் போக்குவரத்து விமானங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பழுது பார்க்கப்பட்ட ஐந்து விமானங்களை சீனா கொடுத்துதவியதுடன், மேலும் பல ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் சீனா விடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும் சிறிலங்கா அரசு முயற்சித்தும், அதனை இந்தியா விரும்பாது என எண்ணியதால் இம்முடிவு கைவிடப்பட்டுள்ளதாகவும் கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேசமயம் அவுஸ்திரேலியா விடமிருந்தும் ஆயுதங்களை வாங்குவதற்கு சிறிலங்கா அரசு முயன்றபோதும் சிறிலங்காவுக்கு ஆயுதங்களை விற்பதில்லை என்று அவுஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளதாக அறியவருகின்றது. இந்நிலையில் ஆயுதம் சம்பந்தமான தமது கோரிக்கையை மறு பரிசீலனை செய்யுமாறு சிறிலங்கா அரசினால் அவுஸ்திரேலியாவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு வட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது இலங்கையில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் அனுப்பும் அறிக்கையைப் பொறுத்தே இம் மறுபரிசீலனைக் கோரிக்கை கவனத்திற் கொள்ளப்படும்எனத் தெரியவருகின்றது.

---

**கிழக்கில் . . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியிலேயே படையினர் இதனைக் கூறியதுடன் கிழக்கு மாகாணத்தை பகலில் படையினரும், இரவில் விடுதலைப் புலிகளும் ஆண்டுவருவதாகவும் தெரிவித்தனர்.

செய்தியாளர்கள் மத்தியில் இதனைக் கூறிய அதிரடிப் படையின் தளபதியான லயனல் கருணாசேன புலிகளுடன் தாம் கண்ணாம்பூச்சி விளையாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

புலிகளின நடமாட்டம் தமக்குத்தெரியும் அதனைப் போன்று எமது நடமாட்டமும் அவர்களுக்குத் தெரியும். உயிர்பலியைதவிர்த்துக்கொள்ளும் வகையில் புலிகள் பத்து, பன்னிரெண்டு பேராகசெல்லுகின்றனர். அதனைப் போன்று நாங்களும் பத்துப்பன்னிரண்டு பேராகவேநடமாடவுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

பதுங்கியிருந்து தாக்குவதற்கு திருக்கோயில் புலிப் போராளிகளுக்கு வசதியாக அமைந்துள்ளதாகப் படையினர்கூறியதுடன், இப்பகுதியில் இதுவரை பன்னிரெண்டுக்கு மேற்பட்ட அதிரடிப்படையினர் கண்ணிவெடியினால் தமது கால்களை இழந்துள்ளதாகவும் கமாண்டோப் படையின் தளபதியான திரு. உபாலிபந்த் என்பவர் தெரிவித்துள்ளார்.

---

**இராணுவம்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றம் கண்டுள்ளனர் என்று வட பகுதிக்குப் பொறுப்பானஇராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறியுள்ளார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.